ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1890/32 - 2014 නොවැම්බර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.11.27

*1890/32 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண மாகாண சபை**

*2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வட மாகாண மாகாண சபையின் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம்*

வட மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி திட்டமிடல் அமைச்சருமாகிய கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் ஆகிய நான், வட மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய, 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வட மாகாண மாகாண சபையின் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டத்தினை முழுமையாக பொதுமக்களின் தகவலுக்காக இத்தால் வெளியிடுகின்றேன். இந்நியதிச் சட்டம், 2014, ஒகத்து மாதம் 05 ஆந் திகதியன்று வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது என்பதும் இதற்கான கௌரவ ஆளுநரின் சம்மதம் 2014, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி பெறப்பட்டுள்ளது என்பதும் 2014, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதியில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

க. வி. விக்னேஸ்வரன்,<br>
முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும்<br>
ஒழுங்கும், காணி, வீதி அபிவிருத்தி, மின்சக்தி,<br>
வீடமைப்பும் நிர்மாணமும், நீர்வழங்கல், கூட்டுறவு அபிவிருத்தி,<br>
சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்றுறை<br>
மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும்<br>
மாகாண நிர்வாகம், உணவு வழங்கலும் விநியோகமும் அமைச்சர்,<br>
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் செயலகம்,<br>
இல. 26, சோமசுந்தரம் வீதி,<br>
யாழ்ப்பாணம்.<br>
2014, நவெம்பர் 19.

### *2014 ஆம் ஆண்டின் 02 இலக்க, வட மாகாண முத்திரைத் தீர்வைக் கைமாற்றுதல் நியதிச் சட்டம்*

*2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடக்கு மாகாண நிதிநியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சேகரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வைகளை வடக்கு மாகாண உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு மாற்றுதல், நிர்வாகச் செலவினத்தை மாகாண நிதிக்கு அறவாக்குதல் அத்துடன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்கின்ற ஓர் நியதிச் சட்டம்.*

*சுருக்கப் பெயர்.*

*1.* இந்நியதிச் சட்டம் "2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வடக்கு மாகாண முத்திரைத் தீர்வைக் கைமாற்றுதல் நியதிச் சட்டம்" என எடுத்துக்காட்டப்படலாம்.

*முத்திரைத் தீர்வைகளை கைமாற்றுதல்.*

*2.(1)* வடக்கு மாகாணத்தின் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வட மாகாண நிதி நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வட மாகாணத்தின் ஏதேனும் உள்ளூராட்சி நிறுவன நிர்வாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனக்கைமாற்றம் சார்பாக நிறைவேற்றப்படும் அத்தகைய சாதனம் தொடர்பில் மாகாண சபை ஏதேனும் முத்திரைத் தீர்வை (இதனகத்துப்பின்னர் தீர்வை) அறவிட்டு சேகரித்து மாகாண நிதியத்துக்கு செலுத்தியுள்ளவிடத்து அத்தகைய தீர்வையானது எந்த ஆண்டிற்கு சேகரிக்கப்பட்டதோ அவ்வாண்டினையடுத்து வருகின்ற வருடத்தின் தை மாதம் முதலாம் நாளிலிருந்து 2 வருட காலப்பகுதிக்குள்ளாக அமைச்சருக்கு இதனகத்துப் பின்னர் விபரிக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைவாக இந்நியதிச் சட்டத்தின் 1 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கமைவாக, அத்தகைய உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக அலுவலர் ஒருவரின் எழுத்துமூல கோரிக்கையொன்றின் மீது எவ் உள்ளூராட்சி நிறுவன நிர்வாக எல்லைக்குள் அமைந்த எவ்வசையாவாதனத்தின் மீது அத்தகைய முத்திரைத்தீர்வை சேகரிக்கப்பட்டு மாகாணத் திறைசேரிக்கு சேமிக்கப்பட்டதோ அத்தகைய முத்திரைத் தீர்வையானது அதே சொல்லப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்திற்கு உட்பிரிவு (3) இன் நிபந்தனைகளுக்கிணங்க மாகாண நிதியத்திலிருந்து கைமாற்றம் செய்யப்படுததாதல் வேண்டும்.

*கோரிப்பெறப் படாத தீர்வை மாகாண நிதியத்துக்கு மாற்றப்படுதல்.*

(2) உட்பிரிவு (1) இன் கீழ் விபரிக்கப்பட்டவாறாக குறித்த காலப்பகுதிக்குள் அத்தகைய உள்ளூராட்சி நிறுவனத்தால் அல்லது நிறுவனங்களால் கோரிப்பெறப்படாத அத்தகைய தீர்வையானது குறித்த இரண்டு வருடகாலம் முடிவடைந்து அடுத்துவருகின்ற வருடத்தின் தை மாதம் முதலாம் நாளன்று மாகாண நிதியத்துக்கு மாற்றப்படுததாதல் வேண்டும்.

எவ்வாறாயினும் எவ் உள்ளூராட்சி நிறுவனம் தொடர்பான அத்தகைய தீர்வை மாகாண நிதியத்துக்கு மாற்றப்பட்டதோ அத்தகைய உள்ளூராட்சி நிறுவனம் தகுந்த காரணங்களுடன் பிந்திய விண்ணப்பமொன்றை அமைச்சருக்கு முன்வைக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சரானவர் அத்தகைய விண்ணப்பத்தை சீர்தூக்கிப் பார்த்து திருப்திப்படுத்துமிடத்து உட்பிரிவு (1) இல் விபரிக்கப்பட்டதற்கமைவாக சொல்லப்பட்ட உள்ளூராட்சி குறித்த தீர்வையானது மாகாண நிதியத்திலிருந்து மாற்றம் செய்யப்படுததாதலும் வேண்டும்.

*நூற்றுக்கு 1% இற்கு சமாந்தரமான தீர்வைத் தொகையை நிர்வாகச் செலவினமாக மாகாண நிதியத்துக்கு வரவு வைத்தல்.*

(3) அத்தகைய தீர்வையை அத்தகைய உள்ளூராட்சி நிறுவனத்துக்கு உட்பிரிவு (1) இன் கீழ் கைமாற்றம் செய்யும் அத்தகைய சந்தர்ப்பத்தில் மாகாண சபையானது அத்தகைய உள்ளூராட்சி நிறுவனத்துக்கு கைமாற்றம் செய்யும் அத்தகைய தொகையின் நூற்றுக்கு ஒரு வீதத்துக்கு சமாந்தரமான தொகையை தீர்வை சேகரித்தல் தொடர்பான மாகாண நிர்வாகச் செலவினமாக மாகாண நிதியத்திற்கு வரவு வைத்து மீதமான தொகையை குறித்த உள்ளூராட்சி நிறுவனத்துக்கு கைமாற்றம் செய்யப்படுததாதல் வேண்டும்.

*பதிவாளர் தலைமை அதிபதியின் சான்றிதழ்.*

*3.* ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனம் 2 ஆம் பிரிவின் உட்பிரிவு (1) மற்றும் (2) இன் கீழான விண்ணப்பம் எதனையும், பதிவாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவர் சார்பாக அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேறு எவராவது அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னிணைப்பு II இன் மாதிரிக்கமைந்த அட்டவணையொன்றுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டாலொழிய, அத்தகைய விண்ணப்பமானது வலுவுடையதொன்றாகாதாதல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

*4.* இந் நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுதினாலொழிய –

"அமைச்சர்" என்பவர் வடக்கு மாகாண சபையின் நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்.

"உள்ளூராட்சி நிறுவனங்கள்" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என பொருள்படுவதோடு, ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அத்துடன் ஆற்றப்பட்ட தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளை நேரொத்த அல்லது ஒத்தவையான தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அத்துடன் ஆற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட எவரேனும் அதிகாரியையும் உள்ளடக்கும்.

"சாதனம்'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மாகாண நிதி நியதிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

"தீர்வை" என்பது 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடக்கு மாகாண நிதி நியதி சட்டத்தின் அத்தியாயம் XI ஆம் பிரிவு 35 உட்பிரிவு (அ) இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட முத்திரைத் தீர்வை.

"நிர்வாக அலுவலர்'' என்பது,

(அ) மாநகர சபையொன்று தொடர்பில் மாநகர ஆணையாளர் எனவும் அத்துடன் ;

(ஆ) நகர சபை அல்லது பிரதேச சபை ஒன்று தொடர்பில் அதன் செயலாளர் எனவும் பொருள்படும்.

"மாகாண சபை'' என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் யாப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் அத்தியாயம் 154 A (1) இன் ஏற்பாடுகளுக்கமைவாக தாபிக்கப்பட்ட வடக்கு மாகாணத்துக்கான மாகாண சபை.

5. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

மொழி உரைகளில் ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்றல்.

பிரிவு 2 (1)

இணைப்பு - I

2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வடக்கு மாகாண முத்திரைத் தீர்வைக் கைமாற்றுதல் நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அறவீட்டுக்கான விண்ணப்பப்படிவம்.

கௌரவ நிதி அமைச்சர்,
வடக்கு மாகாணம்

2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, வடக்கு மாகாண முத்திரைத் தீர்வைக் கைமாற்றுதல் நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வையை கைமாற்றுமாறு கோரும் விண்ணப்பம்.

| |
|---|
| மாநகர /நகர / பிரதேச சபையின் பெயர் :.............................................. |

2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வடக்கு மாகாண முத்திரைத் தீர்வைக் கைமாற்றுதல் நியதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம்.

.................................... மாநகர/நகர / பிரதேச சபையின் ஆணையாளராகிய/செயலாளராகிய (இதனகத்துப்பின்னர் நிர்வாக உத்தியோகத்தர்)............................. ஆகிய நான் மேற்படி மாநகர/நகர/பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் தொடர்பில் சேகரிக்கப்பட்டு மாகாண நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ள முத்திரைத் தீர்வை ரூபா............................ (ரூபா............................................ ) அறவிடுவதற்கான விண்ணபத்தை இத்தால் விடுக்கின்றேன். இதன்படி 20.............................. வருடத்தின் ................................. மாதத்திற்காக இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் சொல்லப்பட்ட தொகை ரூபா.................................. வை மேற்படி மாநகர/ நகர/ பிரதேச சபைக்கு மாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கையொப்பம்....................................
பெயர் ...............................................
(இறப்பர் முத்திரை)
நிர்வாக அலுவலர்
உள்ளூராட்சி அதிகார சபை.

திகதி ..................................

*பிரிவு 3*

*இணைப்பு - II*

*2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வடக்கு மாகாண முத்திரைத் தீர்வைக் கைமாற்றுதல் நியதிச் சட்டத்தின் பிரிவு 3 இற்கமையவாக வடக்கு மாகாண சபையினால் விபரிக்கப்பட்டுள்ள அட்டவணைப்படிவம்.*

*காணிப்பதிவாளர் பிரிவு/மாவட்டம் :..............................................*

*.............................................. ஆம் வருடம் ........................ ஆம் மாதத்தினுள் மாநகர /நகர /பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களில் அமையப்பெற்ற அசையா ஆதன மாற்றத்துக்கான முத்திரைத் தீர்வை தொடர்பான விபரம்.*

| நொத்தாரிசுவின் விபரம் | | சாதனங்களின் விவரம் | | | | முத்திரைத் தீர்வை விபரம் | | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| தொ இல. | நொத்தாரிசுவின் பெயரும் நிதி முறை பிரதேசமும் | தொ இல. | சாதனத்தின் இல. | அத்தாட்சிப் படுத்தப் பட்ட திகதி | சாதனத்தின் தன்மை | செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை | கொடுப்பனவு முறை (ஒட்டிக் கொள்ளும் முத்திரை/ வங்கியின் கொடுப்பனவுச் சான்றிதழ்) | குறிப்பு |
| | | | | | | | | |
| | | | | | | | | |

(i) மத்திய அரசாங்க முத்திரை ஒட்டப்பட்டிருந்தால் "மத்திய அரசாங்க"த்திற்கான அல்லது "மாகாண சபை" க்கான முத்திரை அல்லது சான்றிதழ் ஒட்டப்பட்டிருந்தால் அது எந்த மாகாண சபைக்கானது என்பது 09 ஆவது நிரலில் குறித்துரைக்காட்டப்படல்.

(ii) ஏதாவது குத்தகை வீட்டின் உறுதி மற்றும் அடகு வைக்கப்பட்ட வீட்டின் உறுதி தொடர்பாக பிழையாக மாகாண சபை முத்திரை/சான்றிதழ் ஒட்டப்பட்டிருப்பின், அவை தொடர்பான சகல விபரங்களையும் படிவத்தில் காட்டப்படல் வேண்டும் ;

(iii) முத்திரைத் தீர்வை நிரல் (06) இன் கீழ் உறுதியின் மூலப்பிரதியில் ஒட்டப்பட்டுள்ள 1 ரூபா பெறுமதி உள்ளடக்கப்பட்டிருப்பின். அது தொடர்பாக வேறு என்பதன் கீழ் காட்டப்படல் வேண்டும்.

தயாரித்தவர் (பெயர்)..................... கையொப்பம் ...........................................

செவ்வை பார்த்தவர் (பெயர்)............... கையொப்பம் .............................................

....................................................................
பதிவாளர் தலைமை அதிபதி/
அவர் சார்பாக அவரால் பெயர்
குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர்

*2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வடக்கு மாகாண முத்திரைத் தீர்வைக் கைமாற்றுதல் நியதிச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறவீட்டுக்கான விண்ணப்பப்படிவம்*

*பதிவாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள................................... மாவட்ட காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமாகிய.......................................... ஆகிய நான் இங்கே உறுதிப்படுத்துவதாவது :-*

மேலே காட்டப்பட்டுள்ள .............................. மாநகர/நகர/பிரதேச சபைக்காக 20............................... ஆம் ஆண்டின் .................... மாதத்திற்கு ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 117) பிரிவு 5 (1) இன் பிரகாரம் இவ்வலுவலகத்தில் காணி உறுதிப்பத்திர இணைப்பிரதிகள் என்னால் உண்மையாகவும் நேர்த்தியாகவும் சரியாகவும் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் முத்திரைத்தீர்வை ரூபா ............................... (ரூபா .................... ) ஆகும் என்பதுடன் நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ள சாதனம் எதுவும் அட்டவணையில் இருமுறை பதிவு செய்யப்படவில்லையெனவும் அதேபோல் அச்சாதனம் இரண்டு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான அட்டவணையில் பதியப்படவில்லை எனவும் அத்துடன் வடக்கு மாகாண சபையினது ஒட்டப்பட்ட முத்திரைகள்/ வங்கியினால் வழங்கப்பட்ட முத்திரைத் தீர்வை தொடர்பான கொடுப்பனவுச் சான்றிதழ்கள் அட்டவணையின் 7 ஆவது நிரலில் காட்டப்பட்டுள்ளன.

கையொப்பம்................................
பெயர்.........................................
(இறப்பர் முத்திரை).

திகதி .........................................

**<u>பதிவாளர் நாயகத்தின் அலுவலகப் பாவனைக்கு மட்டும்</u>**

கௌரவ நிதி அமைச்சர்
வடக்கு மாகாணம்

பதில் கையொப்பத்துடன் தேவையான நடவடிக்கைக்காக வழங்கப்படுகின்றது.

.................................................
(இறப்பர் முத்திரை)
பதிவாளர் நாயகத்திற்காக.

திகதி .......................................
பதிவாளர் நாயகத்தின் அலுவலகம்/முகவரி.

*12- 434*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.